


# தமிழ்நாட்டின் ஐந்து உள்ளாட்சிகளின் வெற்றிகரமான திடக்கழிவு மேலாண்மை குறித்த அனுபவ ஆவணம்

# பொருளடக்கம்


ஒப்புதல் :

சுருக்கக் குறியீடுகள் :

அறிமுகம் :

ஐவகை திடக்கழிவு மேலாண்மை முறைகளின் குறிப்புகள்

திடக்கழிவு மேலாண்மை முறைகளுக்காக ஐந்து உள்ளூர் அமைப்புகள் எடுத்த பொதுவான நிலைப்பாடுகள்

திடக்கழிவுகளைச் சேகரித்தலும் தரம் பிரித்தலும் :

திடக்கழிவு மேலாண்மையை வெற்றிகரமாகச் செயல்படுத்த உதவும் வழிமுறைகள் :

குப்பையிருந்து குபேரனாக :

அனுபவ பகிர்வு :

வழிகாட்டிகள் :

மீள்பார்வை :




# ஒப்புதல்

பின்வரும் நபர்களின் ஒத்துழைப்புடனும் உதவியுடனும் இந்த ஆவணத்தைத் தயாரிக்க முடிந்தது.

டாக்டர் மங்களம் பாலசுப்பிரமணியன் நிர்வாக அறங்காவலர், மற்றும் எக்ஸ்னோரா பசுமை பம்மல் அலுவலர், திருமதி. மாலதி பாலகிருஷ்ணன் முதல்வர், ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக்குலேஷன் மேனிலைப்பள்ளி, திரு. கே. கலாதி, செயல் அலுவலர், திரு. வீ. கருணாநிதி தலைவர், பம்மல் நகராட்சி திரு. வீ. ஜெயமூர்த்தி, தலைவர் மற்றும் மேல்பட்டம்பாக்கம் நகரப்பஞ்சாயத்து வார்டு கவுன்சிலர் : திரு. இளம்பரிதி, செயல் அலுவலர், திரு. கணேசன், தலைமை எழுத்தர் மற்றும் வேலூர், காந்திநகர் நகரப் பஞ்சாயத்தைச் சேர்ந்த வார்டு கவுன்சிலர் : திரு. சுப்பிரமணியன், இயக்குனர் மற்றும் திரு. வி. கணபதி, தொடர்பு அலுவலர், ஸ்கோப், திருச்சி, திரு. வி.சி. சுதாகர், தலைவர், திரு. மூவேந்தன், வட்டார ஒருங்கிணைப்பாளர், முழு சுகாதார இயக்கம், திரு. இ. முருகன் மற்றும் ஹாண்ட் இன் ஹாண்ட் / அறக்கட்டளை பணியாளர், முடிச்சூர் கிராமப் பஞ்சாயத்து; திருமதி. பி. சுமதி மற்றும் டாக்டர். லூகாஸ் டெங்கல், இகோ-புரோ, ஆரோவில்; திரு. கண்ணன், எம் இன்டலாஜி துரை, பிரெஞ்ச் மையம், பாண்டிச்சேரி, பேரா. எம்.எல். தங்கப்பா, புதுச்சேரி; மற்றும் முசிறி, முடிச்சூர், பம்மல், காந்தி நகர் மற்றும் மேல்பட்டம்பாக்கம் போன்ற பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் ஈடுபட்ட உள்ளூர் பொதுமக்கள்.


**புகைப்பட உதவி :** புகைப்படங்கள் புரூக்ஸ் ஆண்டர்சன் என்னும் ஆசிரியரால் எடுக்கபட்டவை. மேலும் எக்ஸ்னோரா பசுமை பம்மல், காந்திநகர் நகரப் பஞ்சாயத்து மற்றும் முடிச்சூர் கிராம பஞ்சாயத்து ஆகியவற்றின் ஆவணப் பெட்டகங்களிருந்து வழங்கப்பட்டவை.



# அறிமுகம்

திடக்கழிவு மேலாண்மைப் பணிளை அனைத்து மட்டங்களிலும் உடனடியாக மேம்படுத்த வேண்டியதே இந்தியா எதிர்நோக்கும் சவாலாக உள்ளது. குப்பைக் கூளங்களையும் திடக்கழிவுகளையும் எங்கும் போடும் பழக்கம் இங்கு பரவலாக உள்ளது. இது காற்று, நீர், நிலம் மற்றும் குடியிருப்போரை மாசுப்படுத்துவதாக உள்ளது. இப்படி மாசுபடுதல் இந்தியா அடைய வேண்டிய புத்துயிர் வளர்ச்சி இலக்குகளை MDG அடையவிடாமல் தடுக்கிறது. மலேரியா மற்றும் பிற நோய்களுக்கு எதிராக தேசம் எடுத்துக்கொண்ட முயற்சி (Goal 6); குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்தல் (Goal 4); சுற்றுச்சூழல் பாதுகாப்பு (Goal 7) போன்ற இலக்குகள், சுகாதாரமற்ற சூழலை உருவாக்குகின்ற கழிவுப் பொருட்கள் சேர்வதால் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடரந்து சேர்கிற திடக்கழிவு, கழிவுநீர் செல்லுகின்ற பாதையை அடைத்துக்கொண்டு, நீர் தேங்குவதற்குக் காரணமாக அமைகிறது. இவற்றில் தொடர்ந்து திடக்கழிவுகளும், நீர்மக் கழிவுகளும் சேருகின்றன. பல நேரங்களில் மனிதக் கழிவுகளும் இவற்றுடன் சேர்கின்றன. இந்த இடங்களில் ஈக்கள், கொசுக்கள், நாய்கள், பூச்சிகள், ஈசல்கள் மற்றும் பூனைகள் வளர்கின்றன. இந்தத் தொந்தரவு தரும் உயிரினங்களால் மலேரியா, போலியோ, சிக்கன்குனியா, டெங்கு, காலரா, டைபாயிடு போன்ற நோய்கள் பரவுகின்றன. இத்தகைய சுகாதாரச் சீர்கேடுகள்தான் இந்தியாவில் குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகமாக முக்கியக் காரணம். ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கணக்கெடுப்பு சுமார் 88% நோய்களுக்கான காரணங்களாகச் சுத்தமற்ற குடிநீர், சுகாதாரமற்ற சூழல் மற்றும் திட, நீர்மக்கழிவுகளை ஒழுங்காகக் கவனிக்காததுதான் என்று தெரிவித்துள்ளது. கலந்து கிடக்கும் குப்பைகளைக் கொளுத்துவதன் மூலம் நஞ்சு பொருள்களும், நஞ்சுப் புகையும் உருவாகின்றன.





(1) கழிவுப்பொருட்கள் தொடர்ந்து அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2047 ஆம் ஆண்டில் வெளியாகும் மொத்த கழிவுகள் சுமார் 260 மில்லியன் டன்னிற்கும் அதிகமாக இருக்கும் - அதாவது இப்போது உள்ளதைவிட ஐந்துமடங்கு அதிகமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர். இந்தக்கழிவுகள் ஆக்கிரமித்துக் கொள்ளும் இடம் 1400 சதுர கிலோமீட்டர் ஆகும்

(2) முக்கியமாக, வளர்ந்துவரும் கழிவுப்பொருட்களில் முதன்மை பெறுவது மின்னணுப்பொருட்களின் குப்பைகள்தான். இந்தியாவின் மின்னணுப் பொருட்களின் குப்பை 2005 ஆம் ஆண்டில், 1,46,180 டன்கள் எனக் கணக்கிடப்பட்டது. இதே அளவு 2012 ஆம் ஆண்டில், 80,00,000 டன்களும் அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மின்னணுக் குப்பைகளை உருவாக்குவதில் தமிழகம் இரண்டாம் இடத்தைப் பெறுகிறது.

(3) திடக்கழிவு மேலாண்மையிலுள்ள புதுமைகள், செயல்பாடுகள், விளைவுகள் போன்றவை நடைமுறைப்படுத்தப்படுவதை இந்த ஆவணம் எடுத்துரைக்கிறது. இதில் தமிழகத்தின் ஐந்து பகுதிகளான திருச்சி மாவட்டத்திலுள்ள முசிறி சிறப்புநிலை பேரூராட்சி, சென்னையிலுள்ள பம்மல் நகராட்சி, வேலூர் மாவட்டத்திலுள்ள காந்திநகர் தேர்வுநிலை பேரூராட்சி மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள மேல்பட்டாம்பாக்கம் முதல்நிலை பேரூராட்சி போன்றவற்றை உதாரணமாகக் கொண்டுள்ளன. இந்தப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை முறைகள் பெருமளவில் சிறப்பாகவும், பிறபகுதிகளில் பின்பற்றத்தக்கதாகவும் அமைந்துள்ளன.

இந்த மாதிரியைப் பின்பற்றி மேலும் பல ஊராட்சி அமைப்புகள் வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்தில் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதுமையான வழிமுறைகள் உடனடியான மற்றும் நீண்டநாள் பயனை உள்ளூர் வாசிகளுக்கும், உள்ளூர் அமைப்புகளுக்கும் வழங்கியுள்ளது. இவற்றில் கீழ்கண்ட நன்மைகள் உண்டு. ஆனால் இவை மட்டுமே நன்மைகள் என்பதில்லை.

- குடியிருப்போரின் பாராட்டுக்கள்.
- உள்ளூரை அழகுப்படுத்துதல்.
- குப்பைகளற்ற கழிவுநீர் அமைப்பு.
- பயன் தரத்தக்க செயல்பாடுகளையும், வழிகாட்டுதல்களையும் உள்ளூர் பகுதிகளை ஏற்றுக்கொள்ளச் செய்தல்.
- அருவருப்பான, நாற்றமடிக்கும் குப்பைகளைக் குறைத்தல்.
- பொதுமக்கள் நலவாழ்வு மேம்படல்.
- உள்ளூர் குறித்த மதிப்பும் அங்கீகாரமும் ஓங்குதல்.
- வறுமைக் கோட்டிற்கு மிகக்கீழே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- நிலத்தில் கொட்டப்படும் கழிவுகளுக்கான தேவையைக் குறைத்தல்.
- கூட்டு உரத்தை உருவாக்குதல்.

தொழில்நுட்ப ரீதியாக இந்தக் கழிவு மேலாண்மை முறை மிக எளிமையானது என்பதைப் பல்வேறு இடங்களில் கிடைத்த அனுபவங்கள் மூலம் உணரலாம். ஆனால் நிலைத்த, அர்பணிப்புத்தன்மை கொண்ட தலைமையும், பொதுமக்களின் விழிப்புணர்வு மற்றும் பங்கேற்பும், திறமையான நிர்வாகமும் இதற்குத் தேவைப்படுகிறது. மிக முக்கியமாக, திட்டத்தின் வெற்றி என்பது பின்வருவனவற்றைச் சார்ந்துள்ளது.

ஒழுங்காக நிர்வகிக்கப்படும் நகரக்கழிவு, பொருளாதார மதிப்பு கொண்டது எனக் கண்டறிதல்.

அனைத்து நிர்வாகக்குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பு, ஆதரவு மற்றும் ஈடுபாடு.

தொடக்க நிலையிலேயே கழிவுகளைப் பிரிக்க பொதுமக்கள் முன்வருதல்.

பொருட்களை வீசி, எறிவதற்குப் பதிலாக அவற்றைக் குறைவாகப் பயன்படுத்துதல்.

மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சிக்கான ஏற்பாட்டை சமுதாய மக்கள் மேற்கொள்ளல்.

அரசாங்கத்தின் திட்டம் மற்றும் நிதியின் மூலமாகப் பல்வேறு திடக்கழிவு மேலாண்மைச் சேவைத் திட்டங்கள் தொடங்கப்பட்டு நடைபெறுகின்றன. ஒரு காலத்தில் தொடங்கப்பட்ட கழிவு மேலாண்மை அமைப்புகள் மூலம் இன்று வருவாய், பயனாளிகள் கட்டணம், கம்போஸ்ட் உர விற்பனை மற்றும் மறுசுழற்சிக்கான பொருட்கள் மூலமாக வரத் தொடங்கியுள்ளது. இவை பல்வேறு நடைமுறைச் செலவீனங்களுக்குப் பயன்படுகின்றன. சில இடங்களில் உள்ளூர் அமைப்புகள் சில தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து அல்லது அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் (NGO) மூலம் திடக்கழிவு மேலாண்மை சேவைகளைத் தொடங்கி, தொடர்ந்து செய்கின்றன. இருப்பினும், மேல்பட்டம்பாக்கம் பேரூராட்சி மற்றும் காந்தி நகர் பேரூராட்சி அனுபவங்கள் மூலமாக, உள்ளூர் அமைப்புகள் தங்கள் சொந்த முயற்சியிலே திடக்ழிவு மேலாண்மைச் சேவைகளை உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதை அறியலாம்.

திடக்கழிவு மேலாண்மைச் சேவைகளில் இணைந்துள்ள பணிகளாவன: பிரித்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல், சீரமைத்தல் மற்றும் திடக்கழிவுகளை ஒழித்தல் ஆகியவையாகும். திடக்கழிவு மேலாண்மையை புதுமையான முறையில் செய்த ஐந்து உள்ளூர் அமைப்புகளின் பொதுவான வழிமுறைகள் இந்த ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## ஐந்து திடக்கழிவு மேலாண்மை முறைகளின் குறிப்புகள்

**முசிறி சிறப்புநிலை நகரப்பஞ்சாயத்து, திருச்சி மாவட்டம் :**

மக்கள் தொகை : 30,000 வார்டுகள் : 18,

சேகரிக்கப்பட்ட கழிவு : நாளொன்றுக்கு 6,000 கிலோகிராம்

மாற்றும் இடங்கள் : 11

வீடுதோறும் சென்று சேகரிக்கும் கூடுதல் ஊழியர்கள் : 10

உபகரணங்கள் : 8 மூன்று சக்கர மிதிவண்டிகள், 10 தள்ளுவண்டிகள், 1 பவர் ட்ரில்லர் மற்றும் 2 ட்ரெய்லர் அடங்கிய டிராக்டர்கள்.

2005 ஆம் ஆண்டு முசிறியில் 4 ஏக்கர் நிலத்தில் 70 சதவிகித குப்பைகள் ஆக்கிரமித்து இருந்து பஞ்சாயத்து ஊழியர்கள் குப்பைகளைக் கொட்ட புதிய இடம் தேவை அல்லது இந்தக் குப்பைகளைச் சமாளிக்க புதிய முறை தேவை என உணர்ந்தனர். அவர்கள் திருச்சியை மையமாகக் கொண்ட அரசுசாரா நிறுவனமான ஸ்கோப் என்ற அமைப்பை அணுகினர். ஸ்கோப் சுற்றுப்புறத் தூய்மை மற்றும் திடக்கழிவுகளை நிர்வகிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர்களாக விளங்கினர்.

ஆறு வார்டுகளைச் சேர்ந்த குடியிருப்போருக்குத் தங்கள் வீடுகளிலேயே திடக்கழிவுகளை எப்படிப் பிரிப்பது என்னும் பயிற்சியை ஸ்கோப் வழங்கியது. மேலும், முசிறி ஊழியர்களுக்குத் திடக்கழிவு மேலாண்மை முறைகளைப் பயிற்றுவிக்க வேலூர் மற்றும் பெங்களூருக்கு அவர்களை அழைத்துச் சென்றது.

பன்னிரண்டாவது நிதி ஆணயத்திடமிருந்து பெறப்பட்ட நான்கு லட்சம் ரூபாயைக் கொண்டு 1.5 ஏக்கரில் இருந்த குப்பை மேட்டை நகரம் சீர் செய்தது. அங்கே ஒரு கூட்டு உரம் உருவாக்குமிடத்தையும் கட்டியது. கேளிக்கை வரிப்பணத்திருந்து ரூபாய் பத்து லட்சம் தொகையில் மண்புழு உர மையம் துவங்கத் தேவையான கான்க்ரீட் தளம் அமைக்கப்பட்டது. ஸ்கோப் வடிவமைத்து தனது நன்கொடையாக கூட்டு உரம் சலிக்கும் கருவி ஒன்றையும் வழங்கியது. நகராட்சி, எக்ஸ்னோரா அமைப்பிருந்து ரூ. 1.5 லட்சமும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடமிருந்து (DRDA) ரூ. 3 லட்சமும் கூட்டு உர தளத்தில் உள்ள சமூகக் கழிவுகளிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் சுத்தகரிப்புக்காகப் பெற்றுக்கொண்டது. இதன் மூலம் ஒரு நாளைக்கு 4000லிட்டர் கழிவு நீர் சுத்தகரிக்கப்பட்டது. வீடுதோறும் சென்று கழிவுப் பொருட்களை சேகரிக்கும் முயற்சி 18 வார்டுகளிலும் செயல்படத் தொடங்கியது. ரூ.70,000 மதிப்பிலான கூட்டு உரத்தை முசிறி விற்பனை செய்துள்ளது மேலும் ரூ. 40,000 பிளாஸ்டிக் கலவைகளையும் விற்றுள்ளது.

**முடிச்சூர் கிராம ஊராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம் :**

மக்கள் தொகை : 20,000 வார்டுகள் : 4

கழிவுகள் சேகரிப்பு : நாளொன்றுக்கு 2000 கிலோ இடங்கள் : 2

வீடுதோறும் சென்று குப்பைகள் சேகரிக்க, தெருவைப் பெருக்க, கழிவுகளைப் பிரிக்க, மற்றும் கூட்டு உர உற்பத்தியைச் செய்ய என நியமிக்கப்பட்ட ஊழியர்கள் : 30+2 மேற்பார்வையாளர்கள்.

வாகனங்கள் : 16 மூன்று சக்கர மிதிவண்டிகள், 1 டிராக்டர் இணைப்புடன்.

2005 ஆம் ஆண்டில் முடிச்சூர் பஞ்சாயத்து, காஞ்சிபுரத்தை மையமாகக் கொண்ட அரசு சாரா நிறுவனமான ஹாண்ட் இன் ஹாண்ட் / சீட் (SEED) ட்ரஸ்ட் நிறுவனங்களை அணுகியது. 4 ஆண்டுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரானது. இதன்படி பஞ்சாயத்து மண்புழு உர உற்பத்திக்கான நிலம் மற்றும் கட்டடத்தை வழங்குவது, குப்பையைப் பிரித்தல் ஆகிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டது. தொண்டு நிறுவனம் கழிவுகளைச் சேகரித்தல் மற்றும் செயல்முறைப்படுத்தலை ஏற்றுக்கொண்டது. காஞ்சிபுர மாவட்ட ஆட்சியகம் ரூ. 4.8 லட்சம் ரூபாயை குப்பைத் தொட்டி மற்றும் மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்குவதற்காகவும், பிற வசதிகளை உருவாக்குவதற்காகவும் வழங்கியது.

தொண்டு நிறுவனம் மாதந்தோறும் வீடொன்றுக்கு 20 ரூபாயை பயனாளி கட்டணமாக வசூலித்தது. மேலும் கூட்டு உர விற்பனை மற்றும் மறுசுழற்சிக்கு உதவும் பொருட்கள் மூலம் வருவாய் கிடைத்தது. பஞ்சாயத்து அதிகாரிகள் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் புதிய முறை பற்றியும் விளக்கம் அளித்தனர். மேலும் 109 பெரிய மஞ்சள் நிற விளம்பரங்களை கிராமம் முழுவதும் வரைந்தனர்.

கழிவுப் பொருட்களை வியாபாரிகளுக்கு விற்பதற்கு முன்னதாக அவை 15 தரங்களில் பிரிக்கப்பட்டன. தொண்டு நிறுவனம் கூட்டு உர விற்பனை மூலம் மாதந்தோறும் ரூ.3000 வருமானத்தை ஈட்டியது. மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் விற்பனை மூலம் ரூ.6,500-ஐ மாதந்தோறும் பெற்றது. தொண்டு நிறுவனம் மாதந்தோறும் பயனாளிகள் கட்டணமாக ரூ.68,000 வசூல் செய்தது.

**எக்ஸ்னோரா பசுமை பம்மல், பம்மல் நகராட்சி, சென்னை :**

மக்கள் தொகை : 1,00,000 வார்டுகள் : 21

கழிவுப்பொருட்கள் சேகரிப்பு : 27,000 கிலோ ஒரு நாளைக்கு

வீடுகள்தோறும் சென்று கழிவுப்பொருட்கள் சேகரிப்பு, தெருவைப் பெருக்குதல், குப்பைகளைப் பிரித்தல் மற்றும் உர உற்பத்தி ஆகியவற்றிற்கு நியமிக்கப்பட்ட ஊழியர்கள் : 159 + 6 மேற்பார்வையாளர்கள்.

வாகனங்கள் : 150 மூன்று சக்கர மிதிவண்டிகள், 45 தள்ளுவண்டிகள், 1 காளை வண்டி, 2 டிராக்டர்கள் உடன் இணைப்புகள், மற்றும் 1 பவர் டில்லர்.

பம்மல் நகரசபையின் திடக்கழிவுகளைச் சேகரித்து செய்து வருகிறது. சீரமைக்கும் பணியை எக்ஸ்னோரா பசுமை பம்மல் என்னும் அமைப்பு செய்கிறது. பம்மல் நகராட்சி இந்தத் தொண்டு நிறுவனத்துடன் இதற்கான ஒப்பந்தத்தில் இணைந்துள்ளது. ஒப்பந்தத்தின் அடிப்படையில் கழிவுகளைச் சீரமைப்பதற்காகவும், மண்புழு உரம் தயாரிக்கும் அமைப்பை நிறுவவும் 1.1 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. பெப்ஸிகோ இந்தியா நிறுவனம் கட்டிடப் பணிகளுக்கு உதவியது. இதன் மூலம் 120 மண்புழு உரத் தொட்டிகள், ஒவ்வொன்றும் 1 டன் எடை கொண்டவையாக, உருவாக்கப்பட்டன. மாட்டுக்கொட்டகை, கிடங்கு, பிரிக்கும் அறைகள், பயிற்சி அறை, கூட்ட அறை போன்றவையும் கட்டப்பட்டன. நகராட்சி குப்பை சேகரிக்கும் வாகனங்களை வழங்கியது. மேலும் எக்ஸ்னோரா பம்மல் சேவை வழங்கும் இல்லங்களுக்கு, ஒரு வீட்டிற்கு 95 பைசா என்ற கணக்கில் வழங்கியது.

மறுசுழற்சிக்கான பொருட்கள் மூலம் மாதந்தோறும் ரூ.10,000 முதல் ரூ.15,000 வரை வருமானம் கிடைத்தது. மண்புழு உர விற்பனை பருவகாலத் தேவையைப் பொறுத்து மாறிக்கொண்டே வந்தது சராசரியாக மாதம் 1000 கிலோகிராம் விற்பனை என இருந்தது. இதன் விற்பனை விலை ஒரு கிலோவுக்கு ரூ.3.80 முதல் ரூ.10 என்று இருந்தது.

**காந்திநகர் தேர்வு நிலை பேரூராட்சி, வேலூர் மாவட்டம் :**

மக்கள் தொகை : 10,700 வார்டுகள் : 15

கழிவுப்பொருட்கள் சேகரிப்பு : 1,600 கிலோகிராம் ஒரு நாள் மற்றும்

வீடுவீடாகச் சென்று கழிவுப்பொருட்கள் சேகரிப்போர், கழிவுப் பொருட்களைப் பிரித்தல், கூட்டு உர உற்பத்தி இவற்றிற்காகக் கூடுதலாக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் : 6 + 1 மேற்பார்வையாளர்.

வாகனங்கள் : 8 மூன்று சக்கர மிதிவண்டிகள், 2 டிராக்டர்கள் உடன் இணைப்பு, 1 பவர் டில்லர்.

காந்திநகர் திடக்கழிவு மேலாண்மை முறை 28 ஜூலை 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பேரூராட்சி அலுவலர்கள், குடியிருப்போர் என அனைவரும் உள்ளூர் எக்ஸ்னோரா வழிகாட்டுதல் மூலம் செயல்பட்டனர். பஞ்சாயத்து 3600 அடிகளில் கம்போஸ்ட் உரக் கொட்டகை கழிவுப் பொருட்கள் பிரிப்பகம் மற்றும் மூன்று சக்கர மிதிவண்டிகள் நிறுத்துமிடம், கிடங்கு, மாட்டுக்கொட்டகை, மண்புழு உரக்கொட்டகை போன்றவற்றைக் கட்டியது. பஞ்சாயத்து பதினொன்றாம் நிதி ஆணையத்திருந்து பெற்ற சமச்சீர் நிதி ஆகியவற்றைக் கொண்டு சமாளித்தது. பேரூராட்சி ஊழியர்கள் உள்ளூர் வியாபாரிகளிடம் 8 மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்கித் தரும்படியாக ஊக்கப்படுத்தினர். மேலும் அனைத்து வீடுகளுக்கும் சிவப்பு மற்றும் பச்சை பக்கெட்களை வழங்கவும் ஏற்பாடு செய்தனர்.

2006-2007 நிதி ஆண்டில் காந்தி நகரில் மறுசுழற்சிக்கான பொருட்கள் ரூ.1,76,005க்கும், கூட்டு உர மதிப்பு ரூ. 37,970 மற்றும் பயனாளிகள் கட்டணமாக ரூ. 3,43,334ம் கிடைத்தன.

**மேல்பட்டம்பாக்கம் முதல்நிலை பேரூராட்சி, கடலூர் மாவட்டம் :**

மக்கள் தொகை : 8000 வார்டுகள் : 15

கழிவுப்பொருட்கள் சேகரிப்பு : 600 கிலோ ஒரு நாளுக்கு

மாற்றும் இடங்கள் : 1

வீட சென்று சேகரித்தல், குப்பைகளைப் பிரித்தல், கூட்டு உர உற்பத்தி ஆகியற்றிற்காக நியமிக்கப்பட்ட கூடுதல்

பணியாளர்கள் : 6

வாகனங்கள் : 6 தள்ளு வண்டிகள், 1 டிராக்டர் இணைப்புடன்

மேல்பட்டம்பாக்கத்தில் மார்ச் 2007-ஆம் ஆண்டு முதல் வீடு வீடாகச் சென்று திடக் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் பணி நகரமன்றத்தலைவர் திரு. வீ. ஜெயமூர்த்தி அவர்களால் தொடங்கப்பட்டது. திரு. வீ. ஜெயமூர்த்தி அவர்கள் அரசு நிலத்தில் இருந்து 40 சென்டடைத் தேர்வு செய்து அதில் 22 மண்புழு உரத் தொட்டிகள், காய வைக்கும் தளம், கிடங்கு, பிரிக்கும் அறை போன்றவற்றைக் கட்டினார். நகரப்பஞ்சாயத்து ஆணையத்தின் மூலம் ரூ. 2.6 லட்சம் பெற்றுக் வாகனங்களை வாங்கினார். நகர்த்தின் பொது நிதியிருந்து செயல்முறைச் செலவுகள் செய்யப்பட்டன. மண்புழு உர விற்பனை மூலம் நிதி கிடைத்தது. மண்புழு உரம் தயாரிக்கும் துறைகள் விளக்கப்பட்டன. இதற்கான ஆலோசனைகள் ஈகோ-ப்ரோ, (ECO-Pro) ஆரோவில் மூலம் பெறப்பட்டன. மாதாந்திரப் பயனாளிகள் கட்டணம் வசூக்கப்படவில்லை. மண்புழு கூட்டு உரத்தின் மூலம் மாதம் ரூ.4500 கிடைத்தது. மொத்த விற்பனையின்போது கிலோ ஒன்றிற்கு ரூ.3 கிலோகிராம் எனக்கொடுத்தார். மறுசுழற்சிக்கு உதவும் பொருட்களை இன்னமும் இதில் விற்கவில்லை. ஆனால், இவை 15 தரங்களில் பிரித்து வைக்கப்பட்டுள்ளன.



திடக்கழிவு மேலாண்மைக்கான திட்டம் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக ஐந்து உள்ளூர் அமைப்புகள் மேற்கொண்ட பொதுவான வழிமுறைகள்.

**1. வெற்றிகரமான திடக்கழிவு மேலாண்மை முறைக்குத் தேவையான அனைத்து அம்சங்களிலும் பரிச்சயம் ஆகுங்கள் :**

**2. திடக்கழிவு மேலாண்மை குறித்த அனைத்துச் செயல்முறைகளையும் அறிந்துகொள்ளுதல் :**

பிற உள்ளூர் அமைப்புகள் தங்கள் தேவையை எவ்வாறு மேம்படுத்திக்கொள்கினறனர் என அறிந்து கொள்ளுதல். இந்த ஆவணத்தின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள பட்டியல் உங்களுக்கு உதவும். அந்தப் பட்டிய-லில் தொழில்நுட்ப உதவி, பயிற்சிகள் வழங்கும் அமைப்புகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் தங்களின் திடக்கழிவு மேலாண்மை முயற்சிகளைப் பிறருக்கும் பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கும் உள்ளூர் அமைப்புகளின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. எனவே, இப்பகுதிகளுக்குச் சென்று திடக்கழிவு மேலாண்மை குறித்து அறிந்து வரலாம்.

**3. உங்கள் பகுதியில் உள்ள கழிவுப்பொருட்கள் குறித்த தகவல்களைச் சேகரியுங்கள் :**

உங்கள் ஊரில் கழிவுப்பொருட்களின் அளவு, அவற்றின் தொடக்க இடம், கழிவு வகைகள் போன்ற புள்ளி விவரங்களை சேகரியுங்கள்.

உங்கள் பகுதியில் கழிவை நிர்வகிக்கத் திட்டம் தயார் செய்யுங்கள் :

ஆய்வின் முடிவுகளின்படியும், பிறரிடமிருந்து அறிந்துகொண்டதை வைத்தும் திட்டத்துக்கு செயல்வடிவம் கொடுங்கள். கழிவு சேகரிப்பு, கையாளுதல், கொண்டு செல்லுதல், பிரித்தல், பாதுகாத்தல், போக்கடித்தல் போன்ற அனைத்தின் திட்ட செயல்வடிவமாக அது இருக்கவேண்டும். அனைத்து வார்டுகளிலும் கழிவு சேகரிக்கும் வரைபடத்தைத் தயார் செய்யுங்கள். கழிவுகள் சேகரிக்கும் முறைகளையும், அவற்றை எவ்வாறு சிறிய வண்டிகளில் வைத்துப் பின்னர் பெரிய வண்டிகளில் ஏற்றி மறுசீரமைப்புக்குக் கொண்டு செல்வது எனத் தீர்மானியுங்கள்.

பட்ஜெட்டை (வரவு செலவு திட்டம்) உருவாக்குங்கள் :

பிற ஆய்வு முடிவுகள், உள்ளூர் வரைபடம் இவற்றைக் கொண்டு உங்கள் ஊருக்குத் தேவையான மனிதவளம், வாகனங்கள், பிற கருவிகள் இவற்றைக் கருத்தில் கொண்டு பட்ஜெட்டை உருவாக்குங்கள். நாளடைவில் கழிவுகளின் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டே நடைமுறைச் செலவை சமாளிக்க முடியும் என்றாலும் நிலையான ஒரு நிதியிருந்து நடைமுறைச் செலவுகளுக்கு வழி காணுங்கள்.

**4. தேவைப்படும் நிலத்தைப் பெறுங்கள் :**

கழிவுகளைச் சுத்திகரிக்க உதவும் இடத்தைத் தேர்ந்தெடுங்கள். அதே சமயம் மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகளை நிரப்பும் ஒரு நிலத்தைத் தேர்ந்தெடுங்கள். குப்பைநிரப்பும் இடத்திற்கான ஒழுங்குமுறைகளை ஆராய்ந்துகொள்ளுங்கள்.

## 5. கூட்டாளிகளை இனம் காணுங்கள் :



உங்கள் பகுதியிலுள்ள குழுக்களைச் சந்தித்து அங்குள்ள கழிவுப் பொருட்களின் நிலை குறித்து விவாதியுங்கள். அப்போது புதிய கழிவுப்பொருள் மேலாண்மைத் திட்டத்தில் பங்குகொள்ள ஆர்வம் கொண்டவர்களை அடையாளம் காணவேண்டும். அவர்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், சுற்றுச்சூழல் மன்றங்கள், ரசிகர் மன்றங்கள், குடியிருப்போர் நலச்சங்கள் என்று பலவகைகளில் இருக்கலாம்.

## 6. செயல் திட்டத்தை உருவாக்குங்கள் :

குடியிருப்போரிருந்து பிரதிநிதிகளைத் முறையாக தேர்ந்தெடுங்கள். அவர்களையும் ஆலோசித்து கழிவுப்பொருள் மேலாண்மைக்கான செயல்திட்டத்தை உருவாக்குங்கள். இது பொதுமக்களின் ஆர்வம் மற்றும் ஒத்துழைப்பை அதிகரிக்கும் செயல்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.




## 7. நிதி ஆதாரங்களை உருவாக்குங்கள் :

செயல்திட்டத்தை வடிவமைத்தபிறகு, முயற்சியைத் தொடங்கி நடத்துவதற்கான நிதியைப்பெற வேண்டும். அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களின் மூலம் நிதி ஆதாரம் நமக்குக் கிடைக்கும். நம் வழிமுறையில் நடைமுறைச் செலவிற்கான பணத்தைப் பெற்றுதரும். இதற்கான தொகையை உள்ளூர் வணிகர்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்களின் (ரோட்டரி, லயன்ஸ் கிளப்) மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் நன்கொடை மூலமாகவோ, குடியிருப்போர் மற்றும் வணிக நிறுவனங்களிருந்து மாதக்கட்டணமாகவோ பெறலாம். அரசு சாராத தொண்டு நிறுவனத்தின் பங்குதாரராக மாறியும் நிதியைப் பெறமுடியும்.

## 8. பொதுமக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குங்கள் :




இந்த புதிய முறையில் பொதுமக்களின் பொறுப்பு மற்றும் பங்களிப்பை உணர்த்தி விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். விழிப்புணர்வு முகாம்களில் கழிவுநீர்களைக் குறைத்தல், மாற்றுப்பயன்பாடு, மறுசுழற்சிப் பொருட்கள் போன்ற தகவல்களை அளிக்க வேண்டும். மட்கும் பொருட்கள், மட்காத பொருட்கள், ஆபத்தான கழிவுகள் போன்றவற்றை ஆரம்பத்திலேயே பிரிக்க வேண்டியதன்

அவசியத்தைக் குறிப்பிட வேண்டும். பொதுக்கூட்டம், வீடுதோறும் சென்று எடுத்துக்கூறுதல், சுவரெழுத்து, அறிவிப்புப் பலகைகள், ஆட்டோப்பிரச்சாரம், ஊர்வலம், போட்டிகள், அறிவிப்புகள், மாட்டுவண்டிகளில் சென்று அறிவித்தல், குழந்தைகளுக்கான நிகழ்ச்சி, வீதி நாடகம், கேபிள் டிவி, துண்டு பிரசுரம் போன்ற வழிமுறைகளின் மூலம் விழிப்புணர்வை உண்டாக்கலாம்.

### 9. வசதிகளை உருவாக்குதல் மற்றும் கருவிகள் வாங்குதல் :

மறுசுழற்சிக்குப் பயன்படும் பொருட்களைப் பிரித்து, அவை விற்பனையாகும்வரை சேகரித்து வைக்கக் கட்டிடம் வேண்டும். கூட்டு உரம் (கம்போஸ்ட்) மற்றும் மண்புழு உரம் போன்றவற்றைத் தயாரித்து தனி உறைகளில் அவற்றை, விற்பனைக்கேற்ப பிரித்து வைக்க வேண்டும். உரிய கருவிகள் பாதுகாக்கபட வேண்டும். தவிர ஊழியர்களுக்குக் குளியலறை மற்றும் கழிப்பறை வசதியை உருவாக்க வேண்டும். கழிவுகளைப் பிரிக்கும் பகுதி வெளிச்சம் மிகுந்ததாகவும் காற்றாட்டமானதாகவும் இருக்க வேண்டும். கழிவுகளைச் சேகரிக்க மூன்று சக்கர மிதிவண்டிகள் ஏற்றவை. அதிக்கபடி பெட்டிகளை இவற்றில் வைக்கமுடியும். தள்ளு வண்டிகளுக்கு குறைவான பராமரிப்புச் செலவே போதும் என்பதோடு, பெண்களும் இப்பணியை எளிதாகக் கையாளலாம். மூன்று சக்கர மிதிவண்டிகள், அவற்றின் வடிவத்தைப் பொறுத்து, 250-ருந்து 500 வீடுகளில் கழிவுப்பொருட்களை சேகரிக்க முடியும். தள்ளுவண்டிகள் 150 முதல் 200 வீட்டுக்கழிவுகளை சேகரிக்கமுடியும். கழிவுப்பொருட்களை சேகரிப்போருக்கு சீருடை, தொப்பி, கையுறை, வாய்கவசம், காலணி, மழைகால ஆடைகள் வழங்கப்பட வேண்டும்.

### 10. பணி நியமனம் மற்றும் பயிற்சி :

சில உள்ளூர் அமைப்புகள், மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலமாக பணியாளர்களைத் தேர்வு செய்கின்றனர். வீடுவீடாகச் சென்று கழிவுகளைச் சேகரிக்கும் போது 1,000ருந்து, 2,400 ரூபாய்வரை மாத ஊதியம் பெறுகின்றனர். இந்த ஏற்பாட்டின் மூலம் கூடுதல் பணியாளர்களையும் தேர்ந்தெடுக்க முடிகிறது.








**11. கழிவுகளை அகற்ற ஒட்டுமொத்த துப்புரவுப்பணி தகவல் மேலாண்மை முறையை உருவாக்குதல் :**



ஊழியர்களின் வருகைபதிவு, செயல்பாடுகள், பயனாளிகளின் கட்டண வசூல், குடியிருப்போரின் கருத்துகளைச் சேகரித்தல், சேகரித்த கழிவுப்பொருட்களின் வகைகள், மறுசீரமைப்பு, சுழற்சி, விற்பனை மற்றும் குப்பைமேட்டுப் பயன்பாடு போன்ற பல விஷயங்களை தகவல் மேலாண்மை முறையில் பதிவு செய்து கொள்ளலாம்.

**12. குடியிருப்போர் அனைவருக்கும் கழிவுகளைப் பிரிப்பதற்கான தனித்தனித் தொட்டிகள் வழங்குதல் :**

தொடக்கநிலையிலேயே மட்கும் கழிவுகளும் மட்காத கழிவுகளும் பிரிக்கப்பட வேண்டும். இதற்காக சிகப்பு மற்றும் பச்சை குப்பைக் கூடை/வாளிகள் வழங்க வேண்டும். அல்லது அவற்றை குடியிருப்போர்களே வாங்குவதை வலியுறுத்தவேண்டும்.



**13. சேவைகளைத் தொடங்குங்கள் :**

ஒருபுறம் கழிவு சேகரிப்பு நடக்கும்போதே, மறுபுறம் அதன் முக்கியதுவத்தை பொதுமக்களுக்குத் தொடர்ந்து விளக்க வேண்டும். தெருவோரம் உள்ள குப்பைத் தொட்டிகளை அகற்றுவதன் மூலம் கழிவுகளை, சேகரிக்கவரும் நபரிடம்தான் கொடுக்க வேண்டும், என்பதை வலியுறுத்த வேண்டும்.





## திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் தரம் பிரித்தல்

### வீடுவீடாகச் சென்று பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல் :

வீடுவீடாகச் சென்று பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரிக்கும் பணி காலை ஏழுமணிக்குத் தொடங்கும். வாரத்தின் ஏழு நாட்களும் இப்படிச் சேகரிக்கப்படுவ-தால் வீடுகளில் கழிவுகள் தங்குவதில்லை. இதில் மட்கும் கழிவுகளின் அளவு குறைவாகவே இருக்கும். சேகரிப்பவர் தனது வருகையை மணியோசை அல்லது விசில் மூலமாகத் தெரிவிப்பார்.



### 1. பிரிக்கப்பட்ட கழிவுகளை மாட்டுவண்டி அல்லது மூன்று சக்கர மிதிவண்டியிமுலம் தனித்தனித் தொட்டிகளில் சேகரித்தல் :

கழிவுகள், பிரிக்கபட்ட நிலையிலேயே, பெரிய தொட்டிகள் அல்லது பைகளுக்கு மாற்றப்படுகின்றன. தள்ளுவண்டிகள் அல்லது மூன்று சக்கர மிதிவண்டிகளில் இதற்கான வசதி உண்டு. தவிர மறுசுழற்சிக்கான பிரிக்கும் பணியும் இங்கே தொடங்கியுள்ளது.




### 2. வண்டியிருந்து பெரிய வாகனங்களுக்கு கழிவுகளை மாற்றுதல் :

வண்டிகள்ால் குப்பை நிறைந்தவுடன், குறிப்பிட்ட சேகரிப்புப் பகுதியில் காத்திருக்கும் பெரிய பண்டிக்கு அவை மாற்றப்படுகின்றன. நிலத்தில் கொட்டி அதிருந்து பின்னர் அகற்றுவதைவிட வண்டிகளின் மூலம் வாகனத்திற்கு கழிவுகள் மாற்றப்படும் முறை உழைப்பையும் நேரத்தையும் மிச்சப்படுத்துகிறது.



### 3. மறு சுழற்சிக்குப் பயன்படும் பொருட்களைப் பிரித்தெடுத்தல் :

கழிவுப்பொருட்கள் வந்து சேர்ந்தவுடன் அவை மீண்டும் பிரிக்கப்படுகின்றன. மறுசுழற்சிக்குப் பயன்படும் பொருட்கள் சேகரிக்கப்பட்டு குவித்து வைக்கப்படுகின்றன.






### 4. கூட்டு உரம் உருவாக்குதல் :

மட்கும் பொருள் வைக்கோல் வரிசைகளிலோ, பெரும் தொட்டிகளிலோ சேர்க்கப்படுகின்றன. தொட்டிகளை ஃப்ளாஸ்டிக் தாளால் மூடிவைப்பதினால் ஈரப்பதத்தைப் தக்கவைக்க முடியும். மட்கவைக்கும் பொருட்களின் மீது வீரியமுள்ள நுண்ணுயிரிகள் தெளிக்கப்படுகின்றது. அல்லது மாட்டுச்சாணக் குழம்பைத் தெளிப்பதன் மூலம் நாற்றம் மற்றும் பூச்சிகளின் தொல்லை குறைவதுடன், மட்கும் வேகமும் அதிகரிக்கும். முசிறியில் கூட்டு உர வைக்கோல் படுகைகளில் தண்ணீர் தெளிக்கப்படுகிறது. பின்னர் அது டீவாட்ஸ் முறையில் சீரமைக்கப்படுகிறது.

### 5. மண்புழு உரத்தை தயாரித்தல் :

ஐந்து ஊர்களிலுமே கூட்டு உர முறைகளில் இரண்டாம் நிலை மண்புழுக்களையே பயன்படுத்துகின்றன. இது இதன் விற்பனை மதிப்பை அதிகரிப்பதுடன் சத்துள்ள இறுதிப்பொருள் கிடைக்கவும் வழி செய்கிறது. இதற்கான தொட்டிகளை அமைக்குமபொழுது புழுக்களின் எதிரிகளான எறும்புகள், எலிகள் மற்றும் காகங்களிடமிருந்தும் புழுக்களை பாதுகாக்க வேண்டும்.

### 6. மண்புழு உரத்தை சலித்தல் :

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை புழுக்கள் அமைந்த வார்பபடங்களை சேகரித்து சலித்த பிறகே உரத்தை உறைகளில் அடைக்க வேண்டும். பெரிய அளவில் தயாரிக்கும்போது இயந்திரங்கள் சலிக்கும் வேலையைச் செய்வதால் கூடுதல் தொகையை மிச்சப்படுத்த முடியும்.

### 7. உரத்தை உறைகளில் அடைத்தல் :

விற்பனைக்காக மண்புழு உரம் உறைகளில் அடைக்கப்படுகிறது.

தினமும் பிரிக்கப்படுகிற கழிவுப்பொருட்கள் எடை போடப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன.









## வெற்றிகரமான திடக்கழி மேலாண்மைக்கான வழிமுறைகள்

பொதுமக்கள் மட்கும் கழிவுகள், மட்கா கழிவுகள் என பிரித்து தருவதன் மூலமாகத்தான் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் முழுமையாக வெற்றிபெறும் என இதில் பணியாற்றுகிற மேலாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதனால்தான் இந்த வழிமுறைகள் தொடங்கப்பட்ட பல ஆண்டுகளுக்குப் பிறகும், தொடக்கத்திலே கழிவுகளைப் பிரிக்கவேண்டிய முக்கியயத்துவத்தை பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லுதல் முக்கியமாகக் கருதப்படுகிறது. பிரிக்கப்பட்ட கழிவு என்பது வளத்திற்கான மூல ஆதாரம் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

கழிவுகள் தொடக்கத்திலேயே பிரிக்கப்படுவதால் மறுசுழற்சிக்குப் பயன்படும் பொருட்கள் சுத்தமாகக் கிடைக்க வாய்ப்புண்டு. இதன்மூலம் செலவுகளையும் குறைக்கமுடியும். சேகரித்தப்பிறகு பிரிக்கும் தொல்லையும் மிச்சமாகும். மறுசுழற்சிக்காக கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் மதிப்பும் அதிகரிக்கும்.

பொதுமக்கள் தங்கள் வீடுகளிலேயே மட்கும் கழிவுகளை வைத்து கூட்டு உரங்களை (கம்போஸ்ட்) உருவாக்கச் செய்தல் மூலம் கழிவுகளைக் கொண்டு சேர்க்கும் செலவு குறையும்.

பொதுமக்களின் பங்கேற்பு வேண்டுமென்றால், தினமும் சரியான நேரத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் அவர்களை நாடிச் செல்ல வேண்டும். பொதுமக்கள் தங்களின் நிறைகள் மற்றும் குறைகளை தயக்கமின்றி, எளிதாகச் சேவை மேலாளரிடம் சொல்லக்கூடிய நிலை இருக்க வேண்டும். இதன் மூலம் வெற்றிகரமான திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும்.

**குப்பையில் இருந்து செல்வத்திற்கு**



ரூ. 7/- கிலோகிராம்


ரூ.11/- கிலோகிராம்



ரூ.16.50/- கிலோகிராம்



ரூ.10/- கிலோகிராம்

## அனுபவப் பகிர்வு



1. மேல்மட்ட கால்வாய்கள் அடைபட்டு நாற்றம் வீசக்குடியதாகக் கிடந்தது. இந்தக் கால்வாய்களைச் சுத்தம் செய்வது மிகப் பெரிய தலைவலியாக இருந்தது. தினந்தோறும் வீடுகள், கடைகளிருந்து கழிவுகளை நேரடியாகச் சேகரிக்கத் தொடங்கிய பின்னர் நகரத்தின் வடிகால் வசதியில் ஏற்பட்ட பிரச்சனைகள் பெருமளவில் குறைந்துள்ளன.

திரு. வீ. ஜெயமூர்த்தி, பஞ்சாயத்துத் தலைவர், மேல்பட்டம்பாக்கம்.




2. நாங்கள் வீட்டுக்குப்பைகளைத் தெருமுனையில் வீசி எறிந்துவந்தோம். இப்பொழுது தினந்தோறும் குப்பைகளைச் சேகரித்துச் செல்வதால் பெருமளவில் கொசுத்தொல்லை, நாற்றம் குறைந்துள்ளது. கால்வாய்களில் குப்பைக்கூளங்கள் விழுந்து அடைபடாததால், சாக்கடைநீர் சீராக வடிந்து ஓடுகின்றது.

திருமதி. சந்திரா, பம்மல்.



3. மருத்துவமனைகள் எப்போதும் கூட்டத்தால் நிரம்பி வழியும். இதற்கு காரணம் மாசுபட்ட சுற்றுச்சூழல்தான். மருந்துக்காகப் பணத்தைச் செலவிடுவதைவிட கழிவுப் பொருட்களைச் சேகரிக்கச் செலவிடலாம்.

திரு. பி.எஸ்.ஜெய்கர், பம்மல்



4. தொடக்கத்தில் சில கவுன்சிலர்கள் இந்த வசதி நம் ஊருக்குப் பொருந்துமா? நம்மால் செலவு செய்ய முடியுமா? என யோசித்தனர். ஆனால், இன்று கழிவுப் பொருட்கள் நமக்கு கூட்டு உர விற்பனை, மறுசுழற்சிக்கான பொருட்களின் விற்பனை போன்றவற்றால் வருவாய் ஈட்டித்தருகின்றன. தற்சமயம் ஊரின் தெருக்கள் தூய்மையாக இருப்பதால் பொதுமக்கள் பாராட்டுகின்றனர்.

திரு. பி. முகமது யூசுப் கவுன்சிலர், மேல் பட்டம்பாக்கம்.



5. முன்பெல்லாம் தெருவில் குப்பைகளை வீசி எறிவது, மற்றும் கொளுத்தி விடுவது ஆகிய செயல்களால் எங்கள் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. சுற்றுப்புறத்தை நாங்கள் கெடுத்தோம். நான் தற்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன். எங்கள் வீட்டிற்கு வந்து சேகரிப்பது வசதியாக உள்ளது.

திருமதி. ஜி. அன்பு, முடிச்சூர்.



6. கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதால், எங்கள் ஊர் பசுமை யாக மாறிவிட்டது. இந்த நன்மைகளைக் கண்டபின், என் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் குப்பைகளைப் பிரித்துக்கொடுக்கும்படி வலியுறுத்துகின்றேன். இதன்மூலம் பிற பகுதிகளும் சுத்தமாகப் பராமரிக்கப்படும்.

வி. பிரியங்கா, பம்மல்.



7. வீடுதோறும் சென்று குப்பை சேகரிப்பதால், கால்வாயில் சேரும் குப்பை குறைந்துவிட்டது. தற்போது கால்வாய்களைச் சுத்தம் செய்ய குறைந்த நேரமே செலவிடுகின்றோம். மேலும் தண்ணீர் தேங்குவது மற்றும் கொசு குறித்தப் பிரச்சனைகள் பெரிய அளவில் இல்லை.

திரு. ஜவஹர்லால் நேரு, கவுன்சிலர், காந்திநகர், வேலூர்.



8. முள்பு நான் எங்கள் வீட்டுக் குப்பைகளைதிறந்தவெளியில் கொளுத்தி விடுவேன். அது பயங்கரமான புகை எழுப்பும். அவர்களைக் கடவுளே அனுப்பியதாக நான் உணர்கிறேன். இப்போது அந்த தவறினை செய்வதில்லை.

திருமதி. இ. ராஜலட்சமி, முடிச்சூர்.



9. குப்பைக் கூளமற்ற சுற்றுச்சூழலில் மாணவர்கள் வளர்க்கப்பட்டால், அவர்கள் மிகவும் பொறுப்பானவர்களாக வளர்வார்கள். அவர்களும் சுற்றுபுறத்தில் குப்பைகளைப் போடமாட்டார்கள். நாம் இந்தப் பூமியில்தான் வாழ வேண்டியுள்ளது. எதிர்காலச் சந்ததியினருக்காக இதை பாதுகாக்க வேண்டும்.

எஸ். சூரியா சுந்தர், பம்மல்.



10. வீடுவீடாகச் சென்று குப்பைகளைச் சேகரிப்பது, வீதிகளில் குப்பைகளைத் தூக்கி எறியும் போக்கைத் தடுத்துள்ளது. இந்தமுறை நன்றாக உள்ளது. நம் வீதிகள் முன்பைவிட சுத்தமாக உள்ளன.

திருமதி. மல்கா பாண்டியன், கவுன்சிலர் முடிச்சூர்.

## திடக்கழிவு மேலாண்மைக்கு வழிகாட்டுபவர்கள்

சர்வதேச எக்ஸ்னோரா,

20, கிரியப்பா ரோடு, தி.நகர்,

சென்னை-600 017.

அலுவலகம் : 044 - 28153376 / 044 - 28153377 / 044 - 24759477

தொலை நகர் : 91-44-42193595

மின்னஞ்சல் : exnora@gmail.com, exnoraindia@hotmail.com

மண்புழு உரம் தயாரிக்க,

சுற்றுச்சூழல் அறிவியல் ஆராய்ச்சி மையம்,

98, பாஸ் நகர்,

3/621, கிழக்குக் கடற்கரைச்சாலை

பாலவாக்கம், சென்னை-600 041.

மின்னஞ்சல் : sultanismail@gmail.com

செல்பேசி : +91 9384898358

வீரிய நுண்ணியிரிகளின் பயன்பாட்டிற்கு :

இகோ - புரோ (ECO Pro)

ஆரோகர்ஜன் காம்ப்ளக்ஸ், ஆரோஷில்பம்,

ஆரோவில் - 605101

விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு

அலுவலகம் : 0413 - 2906482

மின்னஞ்சல் : eco_pro@auroville.org.in

பேருராட்சி தலைவர்,

மேல்பட்டம்பாக்கம் நகரப்பஞ்சாயத்து,

மேல்பட்டம்பாக்கம்,

கடலூர் மாவட்டம் - 607104.

தமிழ்நாடு

அலுவலகம் : 0414227-6489

செயல் அலுவலர்,

காந்திநகர் நகரப்பஞ்சாயத்து,

காந்திபவன்,

29, 4வது இ, முதன்மைச்சாலை,

காந்திநகர், வேலூர்,

வேலூர் மாவட்டம் - 632006

தமிழ்நாடு

அலுவலகம் : 0416 - 2242382.

தமிழ்நாடு நகரப்பஞ்சாயத்துகளுக்கான ஆணையத்தின் திடக்கழிவு மேலாண்மைக்கான குறிப்பேடு

கிராமப்புறப் புற பகுதிகளின் திட மற்றும் நீர்மக்கழிவு மேலாண்மை :

தொழில்நுட்பக் குறிப்பு : 2000, குடிநீர் வழங்கல் துறை, கிராமப்புற வளர்ச்சி அமைச்சகம், மற்றும் யூனிசெப்

## மீள்பார்வை :

மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், 2008, சுற்றுச்சூழலுக்கு உகந்த மின் குப்பைகள் மேலாண்மைக்கான வழிகாட்டுதல்கள், டெல்லி.

கிராமப்புற வளர்ச்சி அமைச்சகம் மற்றும் யூனிசெப் 2007, கிராமப்புறங்களின் திட மற்றும் நீர்மக்கழிவுப் பொருட்கள் மேலாண்மை :

தொழில்நுட்பக் குறிப்பு, நியூ டெல்

சிங்கால், எஸ். மற்றும் எஸ். பாண்டே, 2001, இந்தியாவில் திடக்கழிவு மேலாண்மை : நிலை மற்றும் எதிர்கால இலக்குகள்.

அறிவியல் 6(1) : 1-4.



Printed for government of Tamilnadu with support from UNICEF